# தேருநர் இடாப்பு மீளாய்வு - 2021

## 2021 /ER படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்.

1. நாட்டில் நிலவும் Covid – 19 தொற்று நோய் நிலைமை காரணமாக 2021 தேருநர் இடாப்பு மீளாய்வின்போது வீடு வீடாகச் சென்று தேருநர் இடாப்புப் படிவங்களை விநியோகித்து வாக்காளர்களை (தேருநர்களை) கணக்கெடுக்கும் அலுவல் மேற்கொள்ளப்படாதிருப்பதுடன் நீங்கும் மற்றும் புதிதாக உட்சேர்க்கப்படும் பெயர்களின் அடிப்படையில் தேருநர் இடாப்பு மீளாய்வு அலுவல்களை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2. 2021.06.01 ஆம் திகதியன்று 18 வயது பூர்த்தியடைந்த அதாவது 2003.05.31 ஆம் திகதிக்கு முன்னர் பிறந்த உங்களுடைய வீட்டில் சாதாரணமாக வசிக்கும் இலங்கைப் பிரஜைகள் மற்றும் 2021.06.01 ஆம் திகதியன்று உங்களுடைய வீட்டில் சாதாரணமாக வசிப்பதற்காக புதிதாக வந்திருக்கும் ஆட்களின் (நபர்களின்) பெயர்களை மாத்திரம் இந்தப் படிவத்தின் 2 ஆம் பகுதியில் உள்ளடக்கவும்.

3. இந்த ஆண்டில் 18 வயது பூர்த்தியடைந்தமையின் காரணமாக முதல் முறையாக வாக்காளராகப் பதிவு செய்துகொள்ளப்படுபவர்கள் மற்றும் 2020 நடப்பு தேருநர் இடாப்பில் உங்களுடைய வீட்டுடன் தொடர்புடைய வகையில் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்கள் தவிர்ந்த குறித்த முகவரியில் வசிக்கும் அனைத்து நபர்கள் தொடர்பாகவும் இறுதியாக தேருநர் இடாப்பில் பதிவுடன் தொடர்பான ஆண்டு, வீத வரி (வரிப்பணம்) / பிரதான குடியிருப்புப் பட்டியல் இலக்கம் / கிராமம் / வீதி, கிராம அலுவலர் பிரிவு மற்றும் நிர்வாக மாவட்டம் சம்பந்தமான தகவல்களை கணக்கெடுப்பு அலுவலருக்குப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

4. மரணித்தல், வசிப்பிடத்தை விட்டுச் செல்லல் அல்லது வேறு காரணங்களின் அடிப்படையில் 2021 யூன் மாதம் 01 ஆம் திகதியன்று உங்களுடைய வீட்டிலிருந்து நீங்கும் நபர்களின் பெயர்களை இந்தப் படிவத்தின் 3 ஆம் பகுதியில் உள்ளடக்கவும்.

5. பிரதான குடியிருப்பாளரால் இந்தப் படிவத்தில் உள்ளடக்கப்படும் நபர்களை குறித்த முகவரியின் கீழ் பதிவு செய்வதற்கான பரிந்துரையை கிராம அலுவலர் / கணக்கெடுப்பு அலுவலர் வழங்குவார்.

6. பதிவு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள நபர்களின் பெயர்களை பொது அறிவித்தல் ஊடாக பிரதான குடியிருப்பாளருக்கு அறிவிக்கப்படுவதுடன், அது அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில், பிரதேச செயலகங்களில், உள்ளூராட்சி நிறுவன அலுவலகங்களில் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்படும் 'அ' பட்டியல்கள் (நிரல்கள்) (2020 கணக்கெடுப்புக்கமைய நீக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ள பெயர்கள்) மற்றும் 'ஆ' பட்டியல்கள் (நிரல்கள்) (2021 கணக்கெடுப்புக்கமைய புதிதாக உட்சேர்ப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள பெயர்கள்) ஊடாக அறிவிக்கப்படும்.

7. அந்தப் பெயர்ப் பட்டியல்களைப் பரிசீலித்து எவரேனுமொருவரின் பெயரை பதிவு செய்வதற்கு கிராம அலுவலரால் / கணக்கெடுப்பு அலுவலரால் பரிந்துரை செய்யப்படவில்லையெனத் தெரியவருமாயின், பதிவுக்கான தகைமையைப் பெற்றுள்ள முகவரியின் கீழ், மாவட்டப் பதிவு அலுவலருக்கு (மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்) உரிமைக்கான கோரிக்கை விண்ணப்பத்தை மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் காட்சிப்படுத்தப்படும் காலப் பகுதியினுள் (28 நாட்கள்) சமர்ப்பிக்க முடியும். அதற்குத் தேவையான உரிமைக்கான கோரிக்கை விண்ணப்பத்தை மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் காட்சிப்படுத்தப்படும் காலப் பகுதியினுள் காட்சிப்படுத்தப்படும் அனைத்து இடங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

8. 2021/ER படிவத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ள அனைத்து நபர்களும் வீட்டில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகள் எனவும், 2021 யூன் மாதம் 01 ஆம் திகதியன்று அவர்களுடைய வயது 18 அல்லது அதனிலும் அதிகமெனவும், அவர்கள் 2003.05.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்தவர்களெனவும், குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பெயரும் தகைமை பெற்ற வாக்காளர்களாக (தேருநர்களாக) வேறு எந்தவொரு வீட்டின் கீழ் உட்சேர்க்கப்படவில்லையெனவும், உண்மையான தகவல்கள் உட்சேர்க்கப்பட்டிருப்பதாகவும் பிரதான குடியிருப்பாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

9. தாங்கள் அறிந்துகொள்வதற்காக 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் 12 (4) ஆம் உப பிரிவு இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஆம் உப பிரிவின் கீழ் தேவையான தகவல்கள் தன்வசம் இருக்கையில், அதந்தத் தகவல்களை பதிவு செய்யும் அலுவலருக்கு அல்லது குறித்த அலுவலுக்காக பதிவு செய்யும் அலுவலரால் நியமிக்கப்பட்ட எவரேனுமொரு நபருக்கு வழங்குவதனை தவிர்க்கும் அல்லது வேண்டுமென்றே பொய்யான தகவலொன்றை வழங்கும் அனைத்து நபர்களும் தவறிழைப்பதுடன், நீதிபதியொருவரின் முன்னிலையில் குற்றவாளியாக்கப்பட்டால் ஐநூறு ரூபாவை விஞ்சாத தண்டப் பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு சிறைவாசம் அனுபவிப்பதற்கு அல்லது இவையிரண்டிற்கும் உட்படுத்தப்படுவதற்கு முடியும்."

**பதிவு செய்யும் அலுவலர்**
2021 யூன் மாதம் 01 ஆம் திகதி.